9th Anniversary Celebrations – The Kovai Herald

# தி கோவை ஹெரால்டு

# THE KOVAI HERALD

RNI.Regn.No.TNBIL/2018/76255 | Postal No: CB/154/2021-23 | Kovai / Tirupur | thekovaiherald.com | facebook.com/Thekovaiherald

Volume 9 | Issue 9 | English & Tamil Weekly | 26.7.2026 SUNDAY | 8 Pages | Price Rs.5/-

CSR

# CSR HOSPITAL

## Multi Speciality Center

PATIENT SAFETY & QUALITY OF CARE – NABH – ACCREDITED

**Safe and Cost effective surgeries by the experienced hands.**

### ICU



### Cath Lab



### OT



### OUR SURGICAL SPECIALITIES

- General Surgery
- Laparoscopic surgery
- Proctology
- Gynaecology
- Gastroenterology
- Urology
- Oncosurgery
- Neurosurgery
- Paediatric surgery
- Plastic and
- Reconstruction surgery
- Vascular surgery
- Orthopaedics
- Spine surgery
- ENT
- Oral and Faciomaxillary surgery

### 4 MODERN OPERATION THEATRES WELL EQUIPPED WITH

- Modular OT
- Laminar Airflow unit
- Hepafilter unit
- 9 inch C Arm unit
- Laparoscopy Unit
- LASER Unit - Proctology, Urology, Gastroenterology and Vascular
- Harmonic scalpel
- Vessel sealer
- Advanced surgical instruments
- Advanced Anaesthesia workstation
- Advanced Haemodynamic monitors
- ABG analyser
- Endoscopy unit
- Bronchoscopy unit

### BACKED UP BY 24 X 7

- Intensive Care Unit (ICU)
- Cath Lab facility
- Radiology unit with 64 slice CT scan
- Dialysis Unit
- Cardiology unit
- Pharmacy
- Laboratory

**24 X 7**

- Experienced Surgical Team
- Anaesthetists
- ICU Specialists
- Skilled Nursing team
- Skilled Technicians
- Skilled Respiratory Therapists

### REFERRAL CENTER FOR

- Surgical Emergencies
- Coronary angiogram and Angioplasty
- Embolization of Vascular bleed
- Post operative ICU care
- High Risk Pregnancy Management

TRUSTED BY 3 MILLION+ PEOPLE

YOUR TRUST, OUR INSPIRATION

FOR APPOINTMENT

**83001 28777**




https://csrhospitals.com

272, 7th Street Extension, Gandhipuram, Coimbatore - 641 012



# God or Karma What to Believe in?

THE KOVAI HERALD

Q: Since childhood, I've been made to believe that God exists, and as a result of that, I've become a devotee. But then I started the hatha yoga program here and have observed that the whole approach of Isha is karma-centric. This would mean there is no God involved anywhere. For twenty-one years, I've believed in God to break that now is really not easy. Please help me get an understanding of that.

Sadhguru: Shankaran Pillai's marriage was on the rocks. He went to a marriage counselor and asked, "What should I do? Whatever I try, everything goes wrong." The marriage counselor said, "You must ask her what she really wants," and he gave him a few tips on how to do that. When Shankaran Pillai came back home, his wife was just reading a woman's magazine and did not bother to look up. He thought for a moment about what words to use; then he said, "Honey, would you like an intelligent man or a handsome man?" She said nothing. Then he moved closer, sat down next to her, and said, "Honey. Darling. Would you like an intelligent man or a handsome man?" Without looking up from the magazine, she said, "Neither I love only you."

She was wise enough to keep the marriage, rather than continuing the love affair. Let us look at your devotion. Earlier, you had made the conclusion that there is a God. Now you came to the program here and made the conclusion that Isha is karma-centric ! Once you leave after the program, who knows what conclusions you will make. Stop making conclusions. Yoga means to seek. Seeking means you have realized that you do not know. And you have also come to that level of integrity within yourself that you are unwilling to assume something simply because it is convenient at this point.

From One Assumption to Another

In your community, in your family, it is convenient to believe in God, or rather, in the God all of them believe in, so you did that. Then you came here and you thought, if you keep saying, "Ram, Ram," "Shiva, Shiva," or whatever else, people may laugh at you. So now you have become "karma-centric" ! How long did it take for you to convert? Do not do this to yourself. The very reason why you can shift so easily is because you are moving from one assumption to another, rather than having the courage and commitment to become a seeker. Being a seeker means admitting that you do not know. You do not know whether God rules this world or karma rules this world that is a fact.

Initially, this will make you scared. But whatever you are scared of, you can get accustomed to it after some time. Suppose you are locked in a room with a fire-spitting dragon. If you are not burnt to death, after three days, slowly, you will start a conversation with the dragon. So do not make assumptions or keep shifting from one to another. The fact of the matter is you do not know. This will make you get up in the morning and do your yoga. Who knows whether up there is heaven or hell, God or devil. At least what you know your body, your mind, your energy, your emotion keep it well.

Suppose you go to heaven to enjoy it, you must be in good shape. Suppose you go to hell then you must be in good shape to withstand and survive it! Either way, you need to be in a good shape. And to live on this planet and do well, you also must be in good shape. So no matter if you believe in God or not, you must be in good shape physically, mentally, emotionally, energy-wise.

# Sri Ramakrishna Hospital hosts blood donation drive with Redington Foundation



THE KOVAI HERALD

Sri Ramakrishna Hospital, in association with Redington Foundation, successfully organised its second consecutive blood donation drive.

Swarnalatha, Founder of Swargam Foundation, attended as the chief guest. S. Narendran, Joint Managing Trustee of SNR Sons Charitable Trust, and C.V. Ramkumar, CEO of the Trust, Dr. S. Alagappan, Medical Superintendent of Sri Ramakrishna Hospital, and Dr. Sridhar Gopal, Consultant Haemato-Oncologist were present on the occasion.

Rajat Vohra, CEO of Redington India, and Venkatesh R., Global Chief Sustainability Officer of Redington Limited, joined the programme virtually and appreciated the initiative. The event concluded with a vote of thanks by Seetha Dhruva, Managing Trustee of Redington Foundation.

# Sri Aiswarya Hospital organises Free Multi-Specialty Medical Camp



THE KOVAI HERALD

A free multi-specialty medical camp jointly organized by Sri Aiswarya Hospital and the Indian Medical Association (IMA), Coimbatore Branch, was held at Sri Aiswarya Hospital in Chinnathadagam.

Tamil Nadu Minister for Backward Classes Welfare and Coimbatore District Minister V. Sampath Kumar inaugurated the camp. The camp offered free consultations, diabetes, eye, dental, neurological and cholesterol screening, dietary counselling, physiotherapy guidance, and specialist consultations.

At the camp, several medical specialists participated and provided treatment to the general public. The participating doctors included Dr. T. Parameswaran, Specialist in General Medicine and Diabetology; Dr. M. Duraikannan, Pediatrician and a team of doctors extended the necessary support for organizing the camp.

# Tamil Nadu Day Celebrated at Ganga College of Nursing

Ganga College of Nursing celebrated Tamil Nadu Day at the college auditorium. The programme, organized by the Student Nurses Association (SNA), showcased the rich cultural heritage and traditions of Tamil Nadu.



The celebration featured a special talk titled "The Pride of Tamil Nadu," along with vibrant cultural programmes, including traditional folk dances, folk songs, a Traditional Food Festival, a Neli Kolam Competition, and various other performances reflecting the state's cultural legacy. The event provided nursing students with an opportunity to gain deeper insights into Tamil culture and the nutritional and health benefits of traditional cuisine. It also encouraged the development of leadership qualities, teamwork, social responsibility, and professional values among the students.

The programme was attended by chief guests Chithra Palaniappan, Director of Rathna Group of Companies, and Mahalakshmi Subra maniam, Secretary of Annai Kasthuribai Women and Consumer Welfare Associ ation. The event was also graced by the presence of the college trustees, Kanagavalli Shanmuganathan and Nirmala Rajasabapathy.

# KMCH facilitates Multi-Organ donation man gives new lease of life to seven patients

THE KOVAI HERALD



KMCH Hospital, Coimbatore, successfully facilitated a multi-organ donation that helped provide life-saving transplants and tissue donations to seven patients after a 24-year-old man was declared brain-dead.

The donor, Gunaseelan (24), was admitted to KMCH after developing severe breathing difficulty following a choking incident while eating. Despite receiving intensive treatment from the hospital's critical care team, his condition did not improve, and he was declared brain-dead.

Following counselling by the hospital's transplant coordinators, the donor's parents, Tamilselvan and Jothimani, consented to donate his organs. In coordination with the Tamil Nadu Organ Donation Authority and the police, KMCH's organ retrieval team success fully retrieved the liver, kidneys, corneas, bones and skin. The liver and kidneys were transplanted at KMCH, while the corneas, bones and skin were allocated to another private hospital in Coimbatore for transplantation and tissue preservation.

KMCH Chairman Dr. Nalla Palaniswami said greater public awareness on organ donation is essential, as one donor can save multiple lives. He thanked the donor's family for their compassionate decision, stating that their act of generosity had given a new lease of life to several patients and inspired hope for many others awaiting transplants.

# International Grandmaster Chess Tournament Returns to Coimbatore After 40 Years




Coimbatore will host an International Grandmaster Open Chess Tournament from January 11 to 18, 2027, marking the city's return to the international chess calendar after nearly 40 years. The announcement was made at a press conference organized by the Tamil Nadu Chess Association. The tournament is being jointly organized by Miracle School of Chess and the Coimbatore District Chess Association (CDCA), with Akshaya College of Engineering as the title sponsor.

The event will feature four categories and offer a total prize pool of Rs.45 lakh, along with two cars, six motorcycles, and 100 chess clocks as special prizes. Lalgudi MLA Leema Rose Martin was the Chief Guest on the occasion.

# Nehru International School Celebrates Investiture Ceremony 2026-2027

THE KOVAI HERALD



Nehru International School, Kaliyapuram, proudly conducted its Investiture Ceremony 202627 at the NIS Auditorium formally inducting the newly elected Prefectorial Council.

The ceremony commenced with the Flag Hoisting by Srinivasan, Deputy Commandant, CRPFRAF. K. S. Sivaprakash, Principal, Nehru International School welcomed the gathering. Addressing the gathering, Dr. P. Krishnakumar, Pro Chancellor, P.K. DAS Deemed to be University, and CEO & Secretary, Nehru Group of Institutions, encouraged the newly elected student leaders. Dr. H. N. Nagaraja, Executive Director, Academics & Administration, Nehru Group of Institutions, delivered the Address. The keynote address was delivered by Dr. Chaitanya Krishnakumar, Correspondent, Nehru International School and Nehru Kids Academy.

# Collector invites applications for Rs.1 Lakh Literary Grant for SC/ST writers

THE KOVAI HERALD

Applications have been invited for the 20252026 financial assistance scheme for outstanding writers from the Adi Dravidar and Tribal communities.

The Tamil Nadu Government has enhanced the financial assistance to Rs.1 lakh each for 11 selected writers under the Adi Dravidar and Tribal Art and Literary Development Association.

The initiative aims to promote and strengthen the artistic, cultural and literary talents of the Adi Dravidar and Tribal communities.

Eligible applicants can obtain application forms from the District Adi Dravidar and Tribal Welfare Office or the Office of the Commissioner of Adi Dravidar Welfare on working days. The application can also be downloaded from the Tamil Nadu Government website by scanning the notified QR code.

District Collector Pawankumar Giriappanavar has urged eligible writers to apply and make use of the scheme.

For further details, applicants may contact the District Adi Dravidar and Tribal Welfare Office.

# NATCON 2026 begins in Coimbatore



The fourth edition of the National Convention of Civil Engineers (NATCON 2026), organised by the Association of Consulting Civil Engineers (India), began in Coimbatore on Thursday.

The two-day convention, themed "Smart, Sustainable, Resilient," focuses on climate change, sustainable infrastructure, and emerging technologies in civil engineering.

NATCON Chairman C.J. Ragunathan inaugurated the event. ACCE(I) President Rajendra Kalbavi Rao, Chief guest Justice R. Suresh Kumar, former judge of the Madras High Court, experts from India and abroad, including Dr. Madhavi Latha Gali of IISc Bengaluru, partcipated in the convention.

FOR NEWS Publication
9244317182
04223147962

# Federal Bank Engages HNI Clients in Coimbatore with 'Wealth & Wisdom' Series

THE KOVAI HERALD



Federal Bank's Wealth Management team hosted an exclusive 'Wealth & Wisdom' engagement programme for High Net Worth Individual (HNI) customers at Park Elanza in Coimbatore. The event featured interactive discussions on evolving market trends, investment opportunities, and long-term wealth creation strategies. Jithesh P.V., Zonal Head, Chennai, Federal Bank, and Usha Nair, Head Distribution, DSP Asset Managers Pvt. Ltd., shared insights on the current economic scenario, equity market outlook, and wealth management opportunities.

# Vice President C.P.Radhakrishnan inaugurates GKNM College of Nursing in Coimbatore




C.P. Radhakrishnan, Vice President of India inaugurated the GKNM College of Nursing in the presence of Rajendra Vishwanath Arlekar, Governor of Tamil Nadu, R. Gopinath, KNC Trust President, Sanjay Jayavarthanavelu, Vice-President of KNC Trust, Dr. Ragupathy Veluswamy, Chief Executive Officer of GKNM Hospital.

THE KOVAI HERALD

The new campus of GKNM College of Nursing was inaugurated in Coimbatore by the Vice President of India, C.P. Radhakrishnan, marking a significant milestone in the institution's four-decade journey in nursing education.

Tamil Nadu Governor Rajendra Vishwanath Arlekar attended the event as the Guest of Honour. The inaugural function was also attended by Kuppuswamy Naidu Charitable (KNC) Trust President R. Gopinath, Vice-President Sanjay Jayavarthanavelu, and Dr. Ragupathy Veluswamy, Chief Executive Officer of GKNM Hospital.

Highlighting the importance of the nursing profession, the Vice-President said nurses play a role that goes far beyond administering medical care. "They make patients feel safe, secure and cared for. Along with medicines, their compassion and concern play an indispensable role in healing," he said, urging nursing students to discharge their responsibilities with dedication, confidence, empathy and courage while upholding the nobility of the profession.

Expressing confidence in the newly inaugurated nursing college, the Vice President Radhakrishnan said it would produce competent and compassionate healthcare professionals who would make significant contributions to nation-building.



Kuppuswamy Naidu Charitable Trust President R. Gopinath presenting the memento to Vice President of India, C.P.Radhakrishnan

The institution traces its origins to 1984, when it was established as the Institute of Nursing to commemorate the birth centenary of G. Kuppuswamy Naidu. It was the first private nursing institution in Coimbatore district and began with an intake of 20 students in the Diploma in General Nursing and Midwifery programme. Over the years, the institution expanded its academic offerings, introducing M.Sc. Nursing programmes in 2010.

The newly inaugurated campus, located opposite GKNM Hospital, features modern infrastructure designed to provide high-quality nursing education. The facility includes technology-enabled classrooms, advanced nursing skills laboratories, simulation-based training centres and extensive clinical training facilities integrated with the tertiary care services of GKNM Hospital.

The management stated that the college aims to equip students with a strong foundation in nursing theory, practical clinical skills and compassionate patient care. By combining academic excellence with hands-on training, the institution seeks to produce competent, confident and ethical nursing professionals capable of meeting the evolving demands of the healthcare sector.

The inauguration marks a new chapter for GKNM College of Nursing as it strengthens its commitment to developing the next generation of nursing professionals dedicated to quality healthcare and patient-centred service.




The trustees of the GKNM Trust and the hospital administration took a group photograph with Vice President C.P.Radhakrishnan and Tamil Nadu Governor Rajendra Vishwanath Arlekar at the inauguration of GKNM College of Nursing.

# Coimbatore Student Wins Global Google AI Research Hackathon

A student from Coimbatore has brought international recognition to Tamil Nadu by winning a Grand Prize in a global Artificial Intelligence (AI) research hackathon jointly organised by Google DeepMind and Kaggle. AI researcher and IIT Madras student Arjun Thilak secured a cash prize of USD 25,000 (approximately ₹24 lakh) for his innovative AI safety research.

Tamil Nadu Minister for Backward Classes, Most Backward Classes and Denotified Communities Welfare V. Sampath Kumar personally met and felicitated Arjun for his achievement. The Minister also assured him that arrangements would be made for him to meet the Chief Minister.



Arjun Thilak, an AI researcher at the Chennai-based office of London-headquartered Eras Innovation, collaborated with fellow AI researcher Ramkumar to develop "Gauge," an AI safety evaluation framework. The tool assesses whether AI models can recognise the limits of their own knowledge and determine when human intervention is required instead of generating potentially inaccurate responses.

The competition, titled "Measuring Progress Towards AGI: Cognitive Abilities," attracted 7,654 participants and 1,063 teams from 192 countries, competing for a total prize pool of USD 200,000. Arjun's team was among only four teams worldwide to receive the prestigious Grand Prize.

The researchers evaluated eight leading AI models, including Google Gemini, Anthropic Claude, Alibaba Qwen, and DeepSeek, using 270 carefully designed questions. The assessment measured each model's ability to estimate the difficulty of a question, express confidence in its answer, and decide whether to respond independently or defer to human supervision.

The study found that AI systems with higher benchmark scores are not necessarily better at recognising their own limitations. The researchers emphasised that as AI adoption expands across critical sectors such as healthcare, education and government, the ability of AI systems to acknowledge uncertainty and seek human verification is essential for ensuring safe and responsible deployment.

## House-to-House Survey of Persons with Disabilities to Continue in Coimbatore Until September

The Coimbatore District Administration has launched a district-wide house-to-house social data survey of persons with disabilities under the Tamil Nadu Rights Project. The survey, which will continue until September 2026, is being carried out by Community Rehabilitation Workers (CRWs) and Community Facilitators (CFs) engaged through the Department for the Welfare of Persons with Disabilities.

District Collector Pawan Kumar has appealed to the public to extend full cooperation to the survey teams. Families without any persons with disabilities are required to produce only their family ration card to facilitate the collection of basic household details.

Households with persons with disabilities have been requested to provide complete information to the enumerators. Individuals already holding disability identity cards should furnish their details for verification and updating of records. Those who do not possess a disability identity card, as well as newly identified persons with disabilities, are also encouraged to register their details without hesitation so that they can be included in the social database and become eligible for government welfare measures.

The Collector said the survey is aimed at creating a comprehensive database to strengthen the planning and delivery of welfare schemes and rehabilitation services for persons with disabilities across the district.

For further information, the public may contact the District Differently Abled Welfare Office at 0422-2380381 or 94999 33471.



# ரோட்டரி மாவட்ட ஆளுநர் ஆர்.எஸ். மாருதிக்கு ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரியில் பாராட்டு




ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முன்னாள் மாணவரும், ரோட்டரி கோவை மாவட்ட ஆளுநருமான ரோட்டேரியன் ஆர்.எஸ். மாருதிக்கு கல்லூரி நிர்வாகம் மற்றும் முன்னாள்மாணவர் சங்கம் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.

எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளையின்நிர்வாக அறங்காவலர் டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் மற்றும் செயலர் முனைவர் பி.எல். சிவக்குமார் முன்னிலை வகித்தார். டாக்டர் சுந்தர் ராமகிருஷ்ணன், ஆர். எஸ். மாருதிக்கு மாலை அணிவித்துநினைவுப்பரிசு வழங்கி கவுரவித்தார். 2005 முதல்ரோட்டரிஇயக்கத்தில் பணியாற்றிவரும்ஆர்.எஸ். மாருதி, கல்வி, சுகாதாரம், இளைஞர் மேம்பாடு உள்ளிட்ட சமூகப் பணிகளில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்.

நிகழ்ச்சியில் மாணவர் மன்ற நிர்வாகிகள் மற்றும் கல்லூரியின் 39 கிளப்புகளின்தலைவர்கள், செயலாளர்களுக்கும் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

# கோவையில் இஸ்கான் 34-வது ஆண்டு ஸ்ரீ ஜெகந்நாதர் தேர்த்திருவிழா




கோவை இஸ்கான் சார்பில் 34-வது ஆண்டு ஸ்ரீ ஜெகந்நாதர் தேர்த்திருவிழா சனிக்கிழமை மதியம் கோலாகலமாக நடைபெற்றது. தேர்முட்டியில் தொடங்கியதேர்த்திருவிழாவில், ஸ்ரீ ஜெகந்நாதர், பலதேவர் மற்றும் சுபத்ரா தேவியார் ஆகியோரின் மூல விக்கிரகங்கள் அலங்கரிக்கப்பட்ட பிரம்மாண்ட தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்தன. தேர் ராஜவீதி, ஒப்பணக்காரவீதி, வைசியாள்வீதி மற்றும் கருப்பகௌண்டர் வீதி வழியாக பவனி வந்து மீண்டும் தேர்முட்டியை வந்தடைந்தது.

நல்லறம் அறக்கட்டளை தலைவர் எஸ்.பி.அன்பரசன் மற்றும் அமைச்சர்கள் வே.சம்பத்குமார், விக்னேஷ் ஆகியோர் தேர்த் திரு விழாவை தொடங்கி வைத்தனர்.இஸ்கான் இயக்கத்தின் மூத்த தலைவர் மற்றும் மண்டலச் செயலாளர் பக்தி வினோத சுவாமி மகாராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில்,கோவையின்தொழிலதிபர்கள், கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கியபிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

### சங்ககால ரோமானிய வணிக மையமாக விளங்கிய கோவை

# வெள்ளலூரில் கிடைத்த அரிய தொல்லியல் சான்றுகள்



கோவை மாவட்டம் வெள்ளலூர்,சங்ககாலத்தில் ரோமானியர்களுடன் வணிகத்தொடர்புகொண்ட முக்கிய மையமாக விளங்கியதற்கான வலுவான தொல்லியல் சான்றுகள் அண்மையில் நடைபெற்ற அகழாய்வில் கிடைத்துள்ளன.

தமிழ்நாடுதொல்லியல் துறை மேற்கொண்ட அகழாய்வில் ரோமானியர்களின் ஆம்போரா பானை ஓடுகள், ரௌலெட்டட்வேர் மட்பாண்டத் துண்டுகள், கண்ணாடி மற்றும் அரிய கற்களால் செய்யப்பட்ட மணிகள், இரும்புப் பொருட்கள்,செங்கல்கட்டட அமைப்புகள் உள்ளிட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொல்லியல் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கண்டுபிடிப்புகள், சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பே வெள்ளலூர் சர்வதேச வணிகத்தில் முக்கிய இடம் பெற்றிருந்ததையும், ரோமானியர்களுடன் நேரடி வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்ததையும் உறுதிப்படுத்துவதாக தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், மேற்குக் கடற்கரை துறைமுகங்கள் வழியாக இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு பொருட்கள் வெள்ளலூர் வழியாக தமிழகத்தின் உள்பகுதிகளுக்குகொண்டு செல்லப்பட்டிருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சங்ககால தமிழர்களின் நகரமைப்பு, வணிகத் திறன் மற்றும் உலக நாடுகளுடனான வர்த்தக உறவுகளை வெளிக்கொணரும் முக்கிய ஆதாரமாக இந்த அகழாய்வு அமைந்துள்ளதாக தொல்லியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# ராம்ராஜ் காட்டனில் ஆடி சிறப்பு சலுகை 2 கலர் சட்டைகள் ரூ.995




ஆடி சிறப்பு விற்பனையை முன்னிட்டு, இந்தியாவின் முன்னணி கலாசார ஆடை நிறுவனமான ராம்ராஜ் காட்டன், 2 கலர் சட்டைகள் ரூ.995 என்ற சிறப்பு சலுகையை அறிவித்துள்ளது.

இந்தச் சலுகையின் கீழ், வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட ரகங்களில் உள்ள அரைக்கை அல்லது முழுக்கை கலர் சட்டைகளில் தங்களுக்குப் பிடித்த நிறம், வடிவமைப்பு மற்றும் அளவைத் தேர்வு செய்து இரண்டு சட்டைகளை ரூ.995-க்கு வாங்கலாம்.

இந்த சலுகை ராம்ராஜ் காட்டன் ஷோரூம்கள் மற்றும் முன்னணி ஜவுளிக் கடைகளில் ஸ்டாக் உள்ளவரை மட்டுமே செல்லுபடியாகும். அலுவலகம், குடும்ப நிகழ்வுகள், பண்டிகை மற்றும் அன்றாட பயன்பாட்டிற்கு ஏற்ற பல்வேறுவடிவமைப்புகளில் சட்டைகள் கிடைப்பதாக நிறுவனம்தெரிவித்துள்ளது.

# காவல்நிலைய இறப்புகளை தடுப்பது எப்படி?



தூத்துக்குடி அமுதா நகர் பகுதியைச் சேர்ந்த வாலிபர் அருணாசலம் என்ற இளைஞர் கடந்த 17ம் தேதி சட்டவிரோத மது விற்பனை வழக்கில் தூத்துக்குடி தென்பா போலீஸ் நிலைய போலீசாரால் அழைத்து செல்லப்பட்டவர் 23 ந்தேதி தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உயிரிழந்து உள்ளார். 4 போலீசார் அருணாசலத்தை தாக்கியதால் அவர் உயிர் இழந்ததாக பெற்றோர் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த 13ந்தேதி நாகர்கோவில்சிறையில்இருந்த குட்கா வழக்கில் கைதான சபரி வர்மன் என்பவர் சிறை ஊழியர்கள் மற்றும் கைதிகள் தாக்கியதில் உயிர் இழந்தார். சிவகங்கையில் 2025ல் காவலர் அஜித்குமார் காவலர்கள் தாக்கி சித்ரவதைக்கு உள்ளாக்கியதால் உயிர் இழந்தார். 2020 ல் சாத்தான் குளம் ஜெயராஜ் -பென்னிக்ஸ் போலீசாரின் காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல்களுக்கு உள்ளாகி படுகொலை செய்யப்பட்டனர். 2026 ம் ஆண்டு மார்ச் 15 வரையிலான காலத்தில் மட்டுமே தமிழகத்தில் 7 சம்பவங்கள் அரங்கேறி உள்ளது.

தமிழகத்தில் தி.மு.க ஆட்சிகாலத்தின் போது மட்டும் 35 லாக்கப் மரணங்கள் நிகழ்ந்து உள்ளது. புதிய முதல்வர் ஆட்சி காலத்திலும் லாக்கப் மரணங்கள் நடைபெற்று வருவது நிர்வாக சீர்கேட்டையும், காவல் துறையின் அத்துமீறலையும் வெளிப்படுத்தும் விதமாகவே உள்ளது.சட்டத்தின்முன்நிறுத்த வேண்டிய குற்றவாளிகளை காவலர்களே தண்டனை அளிப்பது ஏற்புடையது ஆகாது.இது காவல்துறை மீதான நம்பகதன்மையினை சீர்குலைப்பதோடு குடிமக்களின் அடிப்படை உரிமைகளை பறிப்பதாகவே உள்ளது.

உச்சநீதிமன்றம் டி.கே.பாசு வழக்கில் கடந்த 1996ம் ஆண்டு காவல்நிலைய சித்ரவதைகள், லாக்கப் மரணங்கள் தடுக்க 11 கட்டாய வழிகாட்டுதல்களை வழங்கி உள்ளது. இவை அரசியல் அமைப்பின் படி வாழ்வுரிமை, உரிமைகள் அடிப்படையில் அமைந்தவை. இவை போலீசாருக்கு மட்டுமில்லாது CBI, ED, CRPF போன்ற அனைத்து சட்ட அமலாக்க அமைப்புகளுக்கும் பொருந்தும். இதனை சட்டபூர்வமாக பின்பற்றாத அதிகாரிகள் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்கு உட்படுத்தலாம்.

இத்தகைய வழிகாட்டுதல்கள் காவல்துறையினரால் கடைபிடிக்கப் படுவதில்லை. இதனால் காவல் மற்றும் சிறை மரணம் தொடர்கதையாகிறது. அனைத்து காவல் நிலைய லாக்கப் விசாரணை அறைகளில் CCTV பொருத்தப்பட வேண்டும். மனிதஉரிமைமற்றும்சட்டபூர்வ காவல் நடைமுறை பயிற்சி போதுமானதாக இல்லை. எனவே காவலர்களுக்கு இதற்கான முறையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும். உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்கள் அமுல்படுத்துவதோடு அதனை கண்காணிக்க வேண்டும். தேசிய மனித உரிமை ஆணைய அறிவுறுத்தல்கள் காவல்துறையினரால் நடைமுறை படுத்தப்பட வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் கோரிக்கையாக உள்ளது.

# ரேஷன் கார்டில் உள்ள அனைவரும் ஜூலை 31-க்குள் பயோமெட்ரிக் பதிவு செய்ய அரசு அறிவுறுத்தல்

தமிழ்நாட்டில் ரேஷன் கார்டில் இடம்பெற்றுள்ள அனைத்து குடும்ப உறுப்பினர்களும் ஜூலை 31-க்குள் கட்டாயம் பயோமெட்ரிக் (கைரேகை/கருவிழி) பதிவு செய்ய வேண்டும் என அரசு அறிவுறுத்தியுள்ளது.

கோவை மாவட்டத்தில் 11.25 லட்சம் ஸ்மார்ட் ரேஷன் கார்டுகள் மற்றும் 1,523 ரேஷன் கடைகள் உள்ளன. பயோமெட்ரிக் பதிவு பணியை விரைவுபடுத்த ரேஷன் கடை ஊழியர்கள் வீடு தேடி சென்று கைரேகை பதிவு செய்து வருகின்றனர். கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 60 ஆயிரம் பேரிடம் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது அந்தியோதயா அன்ன யோஜனா கார்டுகளில் 95.03%, முன்னுரிமை கார்டுகளில் 96% மற்றும் முன்னுரிமையற்ற கார்டுகளில் 88% பயோமெட்ரிக் பதிவு நிறைவடைந்துள்ளது. இன்னும் சுமார் 3.40 லட்சம் பேர் பதிவு செய்ய வேண்டியுள்ளது.

மேலும்,இறந்தகுடும்பஉறுப்பினர்களின் பெயர்களை உரிய ஆவணங்களின் அடிப்படையில் நீக்கும் பணியும் நடைபெற்று வருகிறது. பயோமெட்ரிக் பதிவுசெய்யாதவர்களின் பெயர்கள் ரேஷன் கார்டிலிருந்து நீக்கப்படும் என அரசு எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை என்றும் அதிகாரிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

# குப்பை அல்ல பணம்... தமிழகம் முழுவதும் உயிரி எரிவாயு ஆலை அமைக்கப்படுமா?



தமிழ்நாட்டில் நகர் புற வளர்ச்சி, மக்கள்தொகை பெருக்கம், தொழில்மயமாதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் குப்பைக்கழிவுகள் அதிகரித்து , சுற்றுச்சூழலுக்கு பெரும் கேடாக மாறியுள்ளது. தமிழகத்தில் தினசரி சுமார் 16,500 டன் திடக்கழிவு உருவாகிறது. சென்னையில் மட்டுமே தினசரி சுமார் 6,150 டன் குப்பை உற்பத்தியாகி பெரும் சவாலாகவே மாறியுள்ளது. சேகரமாகும் குப்பைகள் திறந்தவெளியில் கொட்டப்படுவதால் நீர், மண், காற்று மாசை உருவாக்குவதோடு பல தொற்றுநோய்களுக்கும் காரணமாகிறது.

தற்போது, குப்பை ஒரு பிரச்னை அல்ல அது வருமானம் தரும் வளம் என்னும் வகையில் உயிரி எரிவாயு ஆலை (Bio-CNG) மூலம் பயன்படத்தக்க வகையில் பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. விவசாய, உணவு, தாவர உள்ளிட்ட கழிவுகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பயோகேஸை சுத்திகரித்து உயர் மீத்தேன் அடங்கிய எரிபொருள் உருவாகிறது. இதனை எரிபொருளாக பயன்படுத்த முடியும். அதோடு, உயர்தர இயற்கை உரமாக உள்ளது. இதன்மூலம் மாநிலத்தின் எரிசக்தி தேவையினை பூர்த்தி செய்ய முடியும். ரசாயன உரங்களின் பயன்பாட்டையும் குறைக்க இயலும்.

குப்பைகள் பயன்பாடில்லாமல் தீங்கு விளைவிப்பது இதன்மூலம் தடுக்கப்படுகிறத. மேலும், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானமும், புதிய தொழில்வாய்ப்புகளும் உருவாகும். பசுமை எரிசக்தி துறையில் குஜராத் மாநிலம் முன்னோடியாக திகழும் நிலையில் தமிழ்நாடு இதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அரசு பல கோடி ரூபாய் செலவு செய்து வந்த போதிலும் தொடரும் குப்பைகளால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தோல்விகளையே தழுவுகின்றன.அதிலும்நீர்நிலைகளில் சேகரமாகும் கழிவுகள் பல்வேறு வகையில் பாதிப்புகளை ஏற்படுத்துவதோடு மண்ணின் தன்மையினையும் மாற்றி நிலத்தடி நீர் ஆதாரத்தையும் பாழ்படுத்தி விடுகின்றன.இதனால்,தமிழகம் முழுவதும் பரவலாக உயிரி எரிவாயு ஆலை அமைப்பதேன விமோசனமாக அமையும். இதன்மூலம் சுற்றுச்சூழலுக்கு எவ்வித பாதிப்புகளையும் உருவாக்காமல் குப்பையினையும் வருவாய் ஆதாரமாக மாற்றலாம்.

சென்னை சேத்துப்பட்டில் செயல்பட்டு வரும் உயிரி எரிவாயு ஆலையினை சமீபத்தில் தமிழக முதல்வர் பார்வையிட்டார். மக்கும் கழிவுகளை இயற்கை உரமாகவும், மக்காத கழிவுகளை சாலை அமைக்க மற்றும் சிமெண்ட் ஆலைகளில் மாற்று எரிபொருளாக பயன்படுத்த நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் ஆலோசனை செய்தார். சென்னையில் மட்டுமே இயங்கி வரும் இத்தகைய Bio-CNG ஆலை தமிழகம் முழுவதும் சேகரமாகும் குப்பைபிரச்னையினை தீர்த்து வைக்க இயலாது. இதுபோல் தமிழ்நாட்டில் அனைத்து உள்ளாட்சிபகுதிகளிலும் Bio-CNG அமைக்கப்பட வேண்டும். இதனால்,குப்பையைகொண்டு வருவாய் ஈட்ட முடியும்.



# கோவை கிழக்கு புறவழிச்சாலை திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்

## முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி கோரிக்கை

திி கோவை ஹெரால்டு

கோவை கிழக்கு புறவழிச்சாலை திட்டத்தை செயல்படுத்த, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்துக்கு தமிழக முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது,

'கோவையை அடுத்த மதுக்கரையில் தொடங்கி மயிலேறிபாளையம், ஒத்தக்கால்மண்டபம், சூலூர், காரணம்பேட்டை, கணியூர், குன்னத்தூர் வழியாக, மேட்டுப்பாளையம் சாலையில் நரசிம்மநாயக்கன்பாளையத்தில் இணையும் வகையில் 81 கி.மீ. தொலைவுக்கு கிழக்கு புறவழிச்சாலை உருவாக்க சாத்தியக்கூறு ஆராய்ந்து, திட்ட அறிக்கை தயாரிக்கும் பொறுப்பு தேசிய நெடுஞ்சாலை ஆணையம் வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்த திட்டம் அமைக்கப்பட்டால், விவசாயிகள், பொறியியல்துறை, ஜவுளித்துறை உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள்



மற்றும் கல்வி நிறுவனங்கள் பயனடையும். இது தொடர்பாக, தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணைய அதிகாரிகள் ஏற்கனவே தயாரித்த விரிவான திட்ட அறிக்கை, மத்திய சாலை மற்றும் நெடுஞ்சாலை போக்குவரத்து அமைச்சகத்தால் கைவிடப்பட்டுள்ளது.

கோவை முதல் கரூர் வரையிலான பசுமை வழிச்சாலை திட்டம், மற்றும் கிழக்கு புறவழிச்சாலை திட்டம் ஆகிய இரு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டால், கோவை, திருப்பூர், நீலகிரி, கரூர், ஈரோடு மாவட்ட மக்கள், தொழில்துறையினர் பயனடைவார்கள். தற்போது, கோவை - கரூர் பசுமை வழி சாலை திட்டத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து விட்டு, கோவை கிழக்கு புறவழிச்சாலை திட்டத்தை கைவிடுவது, மேற்கண்ட மாவட்ட மக்களுக்கு அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

எனவே, பொதுமக்கள், விவசாயிகள், தொழில்துறையினரின் வேண்டுகோளை கருத்தில் கொண்டு, இந்த திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை கவனத்தில் கொண்டு, கொங்கு மக்களுக்கும் மிகவும் பயனுள்ள கோவை கிழக்கு புறவழிச்சாலை திட்டத்தை தனித்திட்டமாக நிறைவேற்ற மத்திய சாலைகள் போக்குவரத்து அமைச்சகத்திற்கு தமிழக அரசு, உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும்" இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

CASH FOR GOLD
R-GOLD®
EXCHANGE
Mob: 93457 93457

# ஸ்பெயின் வீரர்களுக்கு எடைக்கு எடை தக்காளி... காரணம் என்ன?



ஸ்பெயின் அணியின் உலகக் கோப்பை வெற்றிக்கு காரமணாக இருந்த, ஃபேபியன் ரூயிஸ் மற்றும் காவிக்கு அவர்களின் சொந்த ஊரில் எடைக்கு எடை தக்காளிகள் பரிசாக வழங்கப்பட்டன.

உலகக் கோப்பை கால்பந்து தொடரின் இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் அணி அர்ஜெண்டினா அணியை வீழ்த்தி கோப்பையை வென்றது. கோப்பையுடன் தலைநகர் மாட்ரிட்டுக்கு திரும்பிய ஸ்பெயின் வீரர்களுக்கு 20 லட்சம் மக்கள் திரண்டு வரவேற்பு அளித்தனர். இது, மொத்த மாட்ரிட் நகர மக்கள் தொகையில் பாதியாகும்.

ஸ்பெயின் அணியின் முன்னணி வீரர்கள் ரூயிஸ் மற்றும் காவி ஆகியோர் செவியே மாகாணத்திலுள்ள லாஸ் பலாசியோஸ் இ வில்லாஃப்ரான்கா என்ற நகரத்தைச் சேர்ந்தவர்கள். இங்குதான், சிறுவயதில் இருவரும் கால்பந்து பயிற்சி பெற்றனர். உலகக் கோப்பையை வென்ற பிறகு, இருவரும் தங்கள் சொந்த ஊருக்கு வந்தனர். அப்போது, அவர்களுக்கு சொந்த ஊர் மக்கள் எடைக்கு எடை தக்காளி கொடுத்து வரவேற்றனர். காவிக்கு 65 கிலோ தக்காளியும், ரூயிஸ்க்கு 85 கிலோ தக்காளியும் பரிசாக வழங்கப்பட்டது.

லாஸ் பலாசியோஸ் பகுதி மக்கள் அளப்பரிய சாதனை செய்பவர்களுக்கு எடைக்கு எடை தக்காளி கொடுப்பதை பாராம்பரியமாக கொண்டுள்ளனர். இந்த நகரம் தக்காளி உற்பத்திக்கும் பெயர் போனது. இந்த நகரத்திலுள்ள இரு கால்பந்து மைதானங்களுக்கும் இருவரது பெயரும் சூட்டப்படவுள்ளது. கடந்த 2010ம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற ஸ்பெயின் அணியில் இடம் பிடித்த ஜீசஸ் நவாஸ், இந்த நகரைச் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# நடிகர் விஜய்க்கு ஜனநாயகன் கடைசி... எம்.ஜி.ஆருக்கு என்ன படம்?



கிட்டத்தட்ட 50 ஆண்டு காலத்துக்கு பிறகு, தமிழகத்தின் முதல்வராகவுள்ள ஒருவரின் திரைப்படம் வெளியாகியுள்ளது.

ஜனநாயகன் படம் பல தடைகளை கடந்து இன்று உலகம் முழுவதும் வெளியானது. கிட்டத்தட்ட 8 ஆயிரம் திரையரங்குகளில் இந்த படம் உலகம் முழுக்க வெளியாகியுள்ளது. உள்நாட்டில் அட்வான்ஸ் புக்கிங்காக 20 கோடியும், வெளிநாடுகளில் 15 கோடியையும் இந்த படம் வசூலித்துள்ளது. உலகம் முழுக்க முதல் நாளில் 90 கோடியை வசூலிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிகிறது.

கடந்த 1977ம் ஆண்டு தமிழக முதல்வராக எம்.ஜி.ஆர் ஆனார். அப்போது, அவர் நடித்த கடைசிப்படமாக மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அகிலனின் 'கயல்விழி' வரலாற்று புதினத்தை தழுவி இந்த படம் எடுக்கப்பட்டுக் கொண்டிருந்த போது, இயக்குநர் பந்துலு திடீரென காலமானார். இதனால், இந்த படத்தின் தயாரிப்பில் தொய்வு ஏற்பட்டது. பின்னர், எம்.ஜி.ஆர் மீதி காட்சிகளை தானே இயக்கி 1978ம் ஆண்டு ஜனவரி 14ம் தேதி பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வெளியிட்டார். இயக்குநர் எம்.ஜி.ஆர் என்றே படம் வெளியானது. ஆனால், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்த படம் தோல்வியை தழுவியது.

சோழ மன்னரிடத்தில் இருந்து மதுரையை மீட்கும் பைந்தமிழ்குமரன் என்கிற பாண்டிய இளவரசன் சுந்தரபாண்டியன் கதாப்பாத்திரத்தில் எம்.ஜி.ஆர் நடித்திருந்தார். இதற்குப்பிறகு, திரையுலகினருடன் எம்.ஜி.ஆர் நெருங்கிய தொடர்பில் இருந்தாரே தவிர, படங்களில் நடிக்கவில்லை. எம்.ஜி.ஆர்., விஜயை தவிர கருணாநிதி, ஜெயலலிதா, மு.க ஸ்டாலின் என தமிழகத்தை ஆண்டு அனைத்து முதல்வர்களுமே தமிழ் திரையுலகுடன் தொடர்பு கொண்டவர்கள்தான். மு.க. ஸ்டாலினும் ஒரே ரத்தம், மக்கள் ஆணையிட்டால் போன்ற படங்களில் சிறப்பு ரோலில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பில்லூர், சிறுவாணி அணையில் வண்டல் மண்

## சிறுதுளி அமைப்பு முக்கிய கோரிக்கை

பில்லூர், சிறுவாணி அணைகளில் படிந்துள்ள வண்டல் மண்ணை அகற்றி வருங்கால சந்ததியினருக்கு நீர் ஆதாரங்களை பாதுகாக்க வேண்டும் என, கோவை 'சிறுதுளி' அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கோவையின் குடிநீர் விநியோகத்திற்கான உயிர் நாடியாக, பில்லூர் மற்றும் சிறுவாணி அணைகள் உள்ள. நகரம் முழுவதும் உள்ள லட்சக்கணக்கான மக்களுக்குத் தூய்மையான நீரை வழங்குகின்றன. இந்த இரு நீர்த்தேக்கங்களிலும் பெருமளவில் வண்டல்மண் படிந்ததால், கொள்ளளவு வெகுவாக குறைந்துள்ளது. இதன் விளைவாக, நீரேற்றும் திறன் குறைந்துள்ளதோடு, விநியோகத்திற்குக் கிடைக்கும் நீரின் அளவும் குறைந்து போய் விட்டது. இந்த அணைகளை தூர்



வார வேண்டும் என, அரசுக்கு சிறுதுளி அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. 'சிறுதுளி' அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கோவை நகரம் விரைவான நகரமயமாக்கல் மற்றும் மக்கள் தொகை, தொழில்துறைகள், கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. இதனால், குடிநீருக்கான தேவை தொடர்ந்து அதிகரித்து, நகரின் தற்போதைய நீர் விநியோகக் கட்டமைப்பின் மீது பெரும் சுமையை ஏற்படுத்தியுள்ளது. நீர் தேவை அதிகரிப்பதும், அதே வேளையில் வண்டல் படிவுகளால் நீர்த்தேக்கங்களின் சேமிப்புத்திறன் குறைவதும், நிலையான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதில் ஒரு பெரும் சவாலாக அமைந்துள்ளது. பில்லூர் மற்றும் சிறுவாணி அணைகளில் படிந்துள்ள வண்டல் மண்ணை அகற்றுவதால், அவற்றின் நீர் சேமிப்புத் திறன் மீட்டெடுக்கப்படும். நிலத்தடி நீர் செறிவூட்டலை அதிகரித்து, குடிநீர் இருப்பை கணிசமாக உயர்த்தும். அணைகள் தூர் வாரப்படுவதால், நீர் சேமிப்புத் திறனை கணிசமாக அதிகரிப்பதோடு, கோவையின் குடிநீர் உள்கட்டமைப்பை வலுப்படுத்தும்.

விரிவடைந்து வரும் மக்கள் தொகை மற்றும் பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு, நீர் தேவைகளை வரும் ஆண்டுகளில் பூர்த்தி செய்யவும் இந்த நடவடிக்கை உதவும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அதிகளவில் சீனி கொள்முதல்... உடன்குடி கருப்பட்டி வியாபாரிகள் சிக்கிய பின்னணி

பனை மரத்தில் இருந்து கிடைக்கும் பதநீரை காய்ச்சி கருப்பட்டி தயாரிக்கின்றனர். தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி பகுதியில் தயாரிக்கப்படும் கருப்பட்டிக்கு புவிசார் குறியீடு கிடைக்கப் பெற்றுள்ளது. ரசாயனங்கள் கலக்காமல் தயாரிக்கப்படும் கருப்பட்டி உடலுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைத் தருவதோடு, இரும்புச்சத்து மற்றும் கால்சியம் போன்ற சத்துக்களின் மூலமாகவும் கருதப்படுகிறது. தென்மாவட்ட மக்களுக்கு கருப்பட்டி தயாரிப்பு முக்கிய தொழிலாகவும், வருவாய் ஆதாரமுமாவும் உள்ளது. பனை தொழிலாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில், பதநீரில்



இருந்து தயாரிக்கப்படும் கருப்பட்டி, கற்கண்டுக்கு மத்திய அரசு ஜி.எஸ்.டி. விலக்கு இருந்தாலும், சூப்பர் மார்க்கெட்டுகளில் விற்றால் 5 சதவிகித ஜி.எஸ்.டி வரி உண்டு.

ஆனால் பதநீரில் 70 சதவீதத்துக்கும் அதிகமாக சீனி கலந்து கருப்பட்டி, கற்கண்டு போன்றவை தயாரித்தால், அவற்றுக்கு 18 சதவீத வரி விதிக்கப்படுகிறது. தமிழகத்திலேயே உடன்குடி பகுதியில்தான் சீனி மூட்டைகளை வியாபாரிகள் அதிகளவில் கொள்முதல் செய்ததாக நெல்லை மாவட்ட ஜி.எஸ்.டி. அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. உடன்குடி பகுதியில் கடந்த சில வாரங்களில் ரூ.5 கோடிக்கு சீனி மூட்டைகளை வியாபாரிகள் கொள்முதல் செய்துள்ளனர்.

அதோடு, பதநீரில் சீனி கலந்து கருப்பட்டி தயாரித்து, அதனை அசல் கருப்பட்டி என்று கூறி ரூ.6 கோடி வரை விற்றதும் கண்டுபிடிக்கப்பட்டது. அசல் கருப்பட்டி என்று கூறி சூப்பர் மார்க்கெட்டுகளில் விற்றதால் 5 சதவீத ஜி.எஸ்.டி. வரி மட்டுமே விதிக்கப்பட்டது.

அதே வேளையில், பதநீரில் 60 முதல் 70 சதவீதம் வரையிலும் சீனி கலந்து கருப்பட்டி தயாரித்து விற்றுள்ளனர். சீனி கலந்து தயாரிக்கப்பட்ட கருப்பட்டிக்கு 18 சதவீத ஜி.எஸ்.டி. விதிக்கப்படாமல், 5 சதவீத வரி மட்டுமே விதிக்கப்பட்டு உள்ளது.

கடந்த 6 ஆண்டுகளில் கருப்பட்டி வியாபாரிகள் சிலர் பல்வேறு முறைகேடுகள் செய்தது கண்டறியப்பட்டன. இதுதொடர்பாக உடன்குடி பகுதியைச் சேர்ந்த 5 கருப்பட்டி வியாபாரிகள் சிக்கினர். அவர்களுக்கு மொத்தம் ரூ.38 கோடி அபராதம் விதிக்கப்பட்டது.

Efforts Never Fail
தமிழகத்தின் மாபெரும் விழிப்புணர்வு கண்காட்சி
31 YEARS SILVER JUBILEE 1995 - 2026
Organised By : The United Educational & Social Welfare Trust
Coimbatore - 641 107. Web : www.unitedtrust.in
போதையில்லா தமிழகம், பாதுகாப்பான தமிழகம்,
புவி வெப்பமயமாதலை தடுத்தல்
1000 க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு பதாகைகள் ஒரே இடத்தில்
Awareness on
- போதைப்பொருள் ஒழிப்பு
- பெண்கள் பாதுகாப்பு
- இணையவழி குற்றங்கள்
- மனநலம் பாதிப்பு
- புவி வெப்பமயமாதல்
- காலநிலை மாற்றம்
- சாலை பாதுகாப்பு
தமிழ்நாட்டில் இதுவரை 138 விழிப்புணர்வு கண்காட்சிகள் பள்ளி, கல்லூரிகளில் நடத்தப்பட்டுள்ளன.

# யுனைடெட் கல்வி அறக்கட்டளை சார்பில் போதை விழிப்புணர்வு கண்காட்சி; அமைச்சர் சம்பத்குமார் தொடங்கி வைத்தார்

திி கோவை ஹெரால்டு

கோவை கணபதி அரசுப்பள்ளியில் குரும்பபாளையம் யுனைடெட் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை சார்பில் போதை விழிப்புணர்வு கண்காட்சி நடைபெற்றது. யுனைடெட் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை சார்பில், நடத்தப்படும் 140வது விழிப்புணர்வு காண்காட்சி இதுவாகும். இந்த கண்காட்சிக்கு யுனைடெட் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை நிறுவனர் டாக்டர். ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். கோவை மாவட்ட கல்வி அலுவலர் கோமதி முன்னிலை வகித்தார். தமிழகபிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார், ரிப்பன் வெட்டி கண்காட்சியை திறந்து வைத்து பேசுகையில், 'முதல்வர் விஜய் தமிழகத்தை போதை இல்லாத மாநிலமாக மாற்ற முயற்சி எடுத்து வருகிறார். இங்கு வைக்கப்பட்டுள்ள



பதாகைகள் ஒவ்வொன்றும் நம் வாழ்க்கையுடன் தொடர்புடையவை. இவற்றைப்பார்த்துமாணவ மாணவிகள் சுதாரித்துக் கொள்ள வேண்டும். வெளிநாடுகளில் தடை செய்யப்பட்ட பப்ஜி போன்றவற்றை விளையாடுவதை மாணவர்கள் தவிர்க்க வேண்டும்.

சமூக பொறுப்புள்ளவர் களாக மாணவர்கள் திகழ வேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள் பெருமையடையும் வகையில், மாணவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும்" என்றார்.

நிகழ்ச்சியில் டாக்டர். ரதாகிருஷ்ணன் எழுதிய 100 புத்தகங்கள் அரசுப்பள்ளி நூலகத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

கண்காட்சியில்போதை மருந்துபயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள், பெண்கள் பாதுகாப்பு, சிறுமிகள் பாதுகாப்பு, சாலை பாதுகாப்பு, புவி வெப்பமயமாதல், மன அழுத்தம், சுற்றுசூழல் பாதுகாப்பு உள்ளிட்ட பல தலைப்புகளில் விளக்கங்களுடன் பதாகைகள் வைக்கப் பட்டிருந்தது. இந்த பதாகைகளை ஏராளமான மாணவ மாணவிகள் பார்வையிட்டனர்.

மாணவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமும் அளிக்கப்பட்டது. நிகழ்ச்சி முடிவில் பள்ளி தலைமை ஆசிரியர் சிவக் குமார் நன்றி தெரிவித்தார். நிகழ்ச்சியில் கோவை மாவட்ட நமது ஊர் நமது பள்ளிஒருங்கிணைப்பாளர் சுபாஷ், ரூட்ஸ் நிறுவன நிர்வாகி சரவணன், சென்னை மீடியா சவுகத் அலி மற்றும் ஆசிரியர், ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

# கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையில் கல்லீரல் மற்றும் குடல் நோய் குறித்த கருத்தரங்கு

திி கோவை ஹெரால்டு

கோவை மெடிக்கல் சென்டர்மற்றும்ஹாஸ்பிடல், 2250-க்கும் மேற்பட்ட படுக்கை வசதிகளைக் கொண்ட முன்னணி மருத்துவமனை ஆகும். மருத்துவத் துறையின் அதிநவீன தொழில்நுட்ப வளர்ச்சிகளை உடனுக்குடன் நேயாளிகளின் பயன்பாட்டுக்கு கொண்டு வந்துவிடும். இந்த மருத்துவமனையிலுள்ள குடல் மற்றும் கல்லீரல் சிகிச்சைக்கான சிறப்பு மையம், அதிநவீன வசதி களைக் கொண்டுள்ளது. கல்லீரல்செயலிழப்புக்கான தனிப்பிரிவு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், அதிநவீன எண்டோஸ்கோபி பிரிவு இந்த மருத்துமனையில் உள்ளன. அனுபவம் வாய்ந்த குடல் நோய் நிபுணர்கள், கல்லீரல் மருத்துவ நிபுணர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் தீவிர சிகிச்சை நிபுணர்கள் அடங்கிய குழுவினர், நோயாளிகளுக்குக்




குறைந்த செலவில் உலகத்தரம் வாய்ந்த சிகிச்சையை வழங்கி வருகின்றனர்.

மருத்துவத் துறையில் தொடர் கற்றலை ஊக்குவிக்கும் நோக்கத்தில், கல்லீரல் மற்றும் குடல் நோய்கள் குறித்த "கேஸ்ட்ரோ ஹெப்கான்" மருத்துவ கருத்தரங்கு கே.எம்.சி.ஹெச் அரங்கில் நடைபெற்றது. கருத்தரங்கில் கே.எம்.சி.ஹெச் மருத்துவமனையின் தலைவரும் மேலாண்மை இயக்குநருமான டாக்டர் நல்லா ஜி பழனிசாமி பேசுகையில், "உலகின் முன்னணி மருத்துவ நிபுணர்களை ஒன்றிணைப்பதன் மூலம், அறிவைப்பகிரப்படுகிறது. இந்த அறிவைக் கொண்டு, மக்களுக்கு அதிநவீன மருத்துவசிகிச்சை மற்றும் நோயாளி நலன் சார்ந்த மருத்துவச் சேவைகளை வழங்க முடியும்" என்றார்.

நிர்வாக இயக்குநர் டாக்டர் அருண் பழனிசாமி தனது உரையில், ''மருத்துவமனையின் வெற்றிக்குக் கூட்டுமுயற்சியும் புதிய கண்டுபிடிப்புகளுமே காரணம் .கேஸ்ட்ரோ ஹெப்கான் போன்ற கருத்தரங்கு மூலம் எங்களது மருத்துவக் குழுவினர் புதிய மருத்துவ முன்னேற்றங்களைத் தெரிந்துகொள்ள முடிகிறது, இது நோயாளிகளுக்குச் சிறந்த முறையில் சிகிச்சையளிக்க உதவுகிறது" என்று பேசினார்.

முதன்மை விருந்தினராகப்பத்மபூஷன் பேராசிரியர் கே.ஆர். பழனிசாமி பங்கேற்றர். இங்கிலாந்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் டேரியஸ் எம் மிர்சா, முகமது தௌஃபிக் சிங்கப்பூரைச் சேர்ந்த டாக்டர் எட்வர்ட் சியோங் சீ கியோங் ஆகியோர் பங்கேற்று பேசினர். கருத்தரங்கில் 250-கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

# இடுக்கு பிள்ளையார் கோவிலில் பக்தர் பலி... ஆந்திர குடும்பத்தினருக்கு நடந்த சோகம்

திருவண்ணாமலை கிரிவலப்பாதையில்இடுக்கு பிள்ளையார் கோவில் அமைந்துள்ளது. இது, பரம்பரை கோயில் ஆகும். இந்த கோவிலில் சிறிய குகைபோன்ற அமைப்பில் 3 வாசல்கள் உள்ளன. பின் வாசல் வழியாக ஒருக்களித்து படுத்தபடி, உள்ளே நுழைந்து, மெல்லமாக கைகளை ஊன்றியவாறு நகர்ந்து முன் வாசல் வழியாக வெளியே வரவேண்டும். கிரிவல நேரத்தில் இடுக்கு பிள்ளையார் கோயிலில் 4,5 மணி நேரம் காத்திருந்து வழிபட்டு செல்வார்கள்.

இடுக்கில் நுழைந்து பக்தர் வெளியேவந்தஉடன் நந்தி இருக்கும். பக்தர்கள் நந்தி பகவானையும், இடுக்குபிள்ளையாரையும் வணங்கி செல்வது வாடிக்கை . இந்தக் கோயிலில் உள்நுழைந்து வந்தால் பில்லி சூனியம் அகலும், உடல் வலி, பிற நோய்கள் தீரும் என்று பக்தர்கள் நம்புகின்றனர். மேலும்குழந்தைபாக்கியம் கிடைக்கும் என புதிதாக திருமணம்ஆனதம்பதிகள் இந்தக்கோயிலுக்குள் நுழைந்து வருகின்றனர்.

நேற்று இரவு ஆந்திராவை சேர்ந்த மணிக்குமார் (வயது 36) என்பவர் தனது குடும்பத்துடன் கிரிவலம் சென்றார். சுமார் 11 மணியளவில் இடுக்கு பிள்ளையார் கோவிலுக்கு சென்ற மணி குமார் குகை வடிவத்தில்உள்ளகோவில்



பகுதியில் படுத்தபடி நுழைந்தார். உடல் பருமன் அதிகம் என்பதால் குகையில்இருந்துவெளியே வர முடியாமல் தவித்தார். மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயங்கினார். இதனை கண்ட, சக பக்தர்கள் மயங்கி கிடந்தவரை போராடிவெளியேகொண்டு வந்தனர்.

பின்னர், 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் மணிக்குமார் வழியிலே இறந்துவிட்டதாக கூறினர். இதை கேட்ட மணிக்குமார் குடும்பத்தினர் கதறி அழுதனர். இதுகுறித்து திருவண்ணாமலைதாலுகா போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.உடல்பருமன் மற்றும் சுவாச பிரச்சனை உள்ள பக்தர்கள் இடுக்கு பிள்ளையார் கோவிலில் உள்ள குகை போன்ற பகுதியில் புகுந்து செல்லக் கூடாது என்று போலீசார் எச்சரித்துள்ளனர்.

# வவ்வால்கள் கழிவில் இவ்வளவு பயன்களா?

## சுவாரஸ்யத் தகவல்கள்

வவ்வால்கள் உலகின் இரண்டாவது பெரிய பாலூட்டிகளாகும். சுற்றுச் சூழல் சமநிலைக்கும், விவசாயத்திற்கும் இவைமுக்கியபங்குவகிக்கின்றன. பெரும்பாலான வவ்வால் கள் தங்கள் உடல் எடையில் 100% வரை அந்துப்பூச்சி, வண்டு, கொசுக்கள் உள்ளிட்டவற்றை உண்கின்றன.

இதனால் பூச்சி கட்டுபடுத்த படுவதுடன் சுற்றுச்சூழல் சம நிலையினைபராமரிக்கஉதவுகிறது மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளின்தேவையை குறைக்கிறது. பல தாவரங்கள் வவ்வாலின் மகரந்த சேர்க்கையினை மட்டுமே நம்பி உள்ளது.

பழங்களை உண்ட பின் விதைகளை வெளியேற்றி காடுகளின் மறு உருவாக்கத்திற்கு உதவுகின்றன. மழைக் காடுகளின் மீட்டெடுக்க இவை முக்கிய பங்கு வகிக்கின்றன. வவ்வாலின் கழிவில் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் அதிகம் உள்ளதால் மண்வளத்தை அளிக்கும் சிறந்த இயற்கை உரமாகவும் திகழ்கிறது.

கொசுக்கள் உற்பத்தியை தடுப்பதால் மலேரியா, டெங்கு உள்ளிட்ட நோய்பரவல் குறைய உதவுகிறது. தமிழ்நாட்டின் விவசாயம், காடுகள், பல்லுயிர் பெருக்கத்திற்கு இவற்றின் பங்களிப்பு அவசியமானதாகும்.

நெல்லை மாவட்டம் பணகுடி பகுதியில் காவல்நிலைய வளாகத்தில் உள்ள மருதமரத்தில் 100 வருடங்களுக்கு மேலாக வவ்வால்கள் கூட்டமாக வாழ்ந்து வருகின்றன. அருகாமையில் உள்ள ராமலிங்க சுவாமி கோவில் விழா மற்றும் இதையொட்டி உள்ள கோவில் வைபவங்களின் போது இப்பகுதியில் பட்டாசு வெடித்து வருகின்றனர்.இதனால்இப்பகுதியில்வாழ்ந்து வரும் வவ்வால்கள் இறப்பதுடன் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகி வருகின்றன. வவ்வால்கள் இரவில் செயல்படும் உயிரினங்கள். அவை எக்கோ லொகேஷன் எனும் ஒலி அலைகளைபயன்படுத்திஇருளில் பறப்பதுடன் உணவுதேடல் மற்றும் இடம் நகர்தலை செய்கின்றன.



பட்டாசுகளின் அதிக சத்தம் அவற்றின் ஒலி அலைகளை குழப்புகிறது. பட்டாசுகளின் திடீர் ஒலி அவற்றின் செயல்பாடுகளை முடக்குகிறது.

மேலும்அவற்றின்மனஅழுத்தம் மற்றும் உடல் பாதிப்புகளுக்கும் காரணமாகிறது. இவற்றின் எண்ணிக்கை குறைந்தால் விவசாயம் மற்றும் சுகாதாரம் முழுமையாக பாதிக்கப்படும். எனவே, வவ்வால் வாழ்விடங்களில் பட்டாசுவெடிப்பதை தடைசெய்திட வேண்டும். வவ்வால்கள் பாதுகாப்பு Forest Conservation Act மற்றும் Biological Diversity Act -படி இது, உறுதி படுத்தப்பட்டு உள்ளது. அவற்றை வேட்டையாடுவது, கொலை செய்வது, வியாபாரம் செய்வதுதடைசெய்யப்பட்டுள்ளது.

பட்டாசு வெடிக்கும் சத்தம், புகைமற்றும் அதிர்வுபறவைகளின் இனப்பெருக்கத்தை கடுமையாக பாதிக்கும் என்பதை கருத்தில் கொண்டுபல,கிராமங்களில்பட்டாசு வெடிக்க தடை விதித்துள்ளனர் தீபாவளிஉள்ளிட்டபண்டிகைகளை பட்டாசு வெடிக்காமல் கொண்டாடு கின்றனர்.

ஈரோடு மாவட்டம் வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தை சுற்றி உள்ள கிராம மக்கள் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக பட்டாசு வெடிப்பதில்லை. நெல்லை மாவட்டம் கூந்தன்குளம் பகுதியில் மக்கள் பட்டாசு வெடிப்பதையும் ஒலிபெருக்கி பயன்படுத்துவதையும் 25 ஆண்டுகளாக தவிர்த்து வருகின்றனர்.

சேலம் மாவட்டம் வேளாவள் தோப்பு பகுதியில் வசிக்கும் வவ்வால்களுக்காக கிராம மக்கள் கடந்த 75 ஆண்டுகாலமாக பட்டாசு களை மறந்து போய் விட்டனர்.

வவ்வால்கள், பறவை களை பாதுகாப்புநமதுகடமையாககருதி செயல்பட்டு வருகின்றனர். இந்த பூமிநமக்கு மட்டும் சொந்தமானது அல்ல எல்லா உயிரினங்களும் வாழ உரிமை உள்ளது. அதற்கு ஊறுவிளைவிப்பதில் நமக்கு கிடைக்கும் சந்தோஷத்தை புறம்தள்ளுவதே நமக்கும், சுற்றுசூழலுக்கும் நன்மை தருவதாகும். அவ்வகையில் இயற்கையின்நண்பர்களாகதிகழும் வவ்வால்கள் விவசாயத்திற்கும், சுற்றுசூழலுக்கும் தரும் நன்மை கருதிஅதனை,அதன்வாழ்விடத்தை பாதுகாக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# வெள்ளலூர் குப்பை கிடங்கு மின்உற்பத்தி: முதல்வருக்கு அதிமுக கவுன்சிலர் கோரிக்கை



கோயம்புத்தூர் வெள்ளலூர் குப்பைக் கிடங்கில் நாளொன்றுக்கு 1,200 டன் கழிவுகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் (Waste-to-Energy) 450 கோடியில் ஆலை அமைக்கும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் எனப் பகுதி பொதுமக்கள், சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் அரசுக்குக் கோரிக்கை விடுத்துள்ளன. இந்த ஆலை அமைக்க ஜூலை 31ம் தேதிக்குள் டெண்டர் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, கோவை 47வது வார்டு மாமன்ற உறுப்பினர் பிரபாகரன் முதல்வர் விஜய்க்கு அனுப்பியுள்ள மனுவில், கூறியிருப்பதாவது, "இந்த திட்டத்தை அமல்படுத்த முந்தைய திமுக ஆட்சியிலேயே அதிமுக எதிர்ப்பு தெரிவித்தோம்.

தற்போது, தவெக அரசு இந்த திட்டத்தை அமல்படுத்த முன்வந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி யுள்ளது.

இதற்கு, அதிமுக சார்பில் கடும்கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம். எனவே, இந்த திட்டத்தை முற்றிலும் கைவிட வேண்டும்'' என்று கூறப்பட்டுள்ளது.

# 30 ஆயிரம் பேருக்கு ஒரு கழிவறை... சர்வதேச நகரத்தின் அவல நிலை

'பெங்களூருபொலிட்டிக்கல் ஆக் ஷன் கமிட்டி' (Bangalore Political Action Committee)என்றதன்னார்வ அமைப்பு வெளியிட்ட பொதுக் கழிப்பறைகள் குறித்த தணிக்கை அறிக்கையின்படி, 1.4 கோடிக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் பெங்களூருவில் சுமார் 800 முதல் 900 பொதுக் கழிப்பறைகள் மட்டுமே உள்ளன.

அதாவது, ஒவ்வொரு 25,000 முதல் 30,000 மக்களுக்கும் ஒரு கழிப்பறை மட்டுமே உள்ளது.சர்வதேசநகரமாக வளர்ந்துள்ள போதிலும், அதற்கேற்ப பொது சுகாதாரக் கட்டமைப்பு வசதிகள் இந்த நகரத்தில் ஏற்படுத்தப்படவில்லை என்று அந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

நகரத்திலுள்ள பொதுக் கழிப்பறைகளின் செயல்பாடு, சுகாதாரம், பாதுகாப்பு ஆகியவற்றில் பெரும் குறைபாடுகள் இருப்பதை இந்த அமைப்பு கண்டறிந்துள்ளது. மத்திய, வடக்கு, தெற்கு மற்றும் மேற்கு பெங்களூரு பகுதி களில்ஆய்வுசெய்யப்பட்ட142 பொதுக் கழிப்பறைகளில், 37 கழிப்பறைகள் (அதாவது 26 சதவீதம்) முற்றிலும் பயன்பாடற்ற நிலையில்உள்ளன.அதேவேளையில்,வெறும்6கழிப்பறைகள் (4.2 சதவீதம்) மட்டுமே 'மிகவும் சுத்தமானதாக இருந்துள்ளது.

நகரில் மொத்தம் 800 முதல் 900 வரையிலான பொதுக் கழிப்பறைகளே உள்ளன. இதில், 58 சதவீத கழிப்பறைகளில்தொடர்ந்து துர்நாற்றம் வீசி வருகிறது. 56 சதவீத கழிப்பறைகளில் மட்டுமே போதுமான வெளிச்சம் இருந்தது. இது, பெண்களுக்குப்பாதுகாப்பு தொடர்பானபிரச்னைகளை எழுப்புவதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஒன்பதுகழிப்பறைகளில் மட்டுமே சாய்வுதளங்கள் (ramps) இருந்தன; இதனால் ஏறக்குறைய 94 சதவீத கழிப்பறைகளை மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது.

பயன்பாட்டில் இருந்த கழிப்பறைகளில் சுமார் 40 சதவீதத்தில் மட்டுமே தண்ணீர் வசதி இருந்தது; அதேவேளையில், எந்த கழிவறையிலுமே சோப் அல்லது குப்பைத் தொட்டிகளோ இல்லை.

பெங்களூருவில் சுகாதாரம் மேம்பட வெறும் கழிப்பறைகளை அமைப்பது மட்டுமல்ல; மாறாக, ஏற்கனவே உள்ள வசதிகள் தொடர்ந்து பயன்பாட்டில் இருப்பதையும், பாதுகாப்பானதாகவும் மாற்றி முறையாகப் பராமரிக்கப்படுவதையும் உறுதிசெய்வதேசரியானது என்றும் 'பெங்களூரு பொலிட்டிக்கல் ஆக்ஷன் கமிட்டி' தெரிவித்துள்ளது.

மேலும், ஒவ்வொரு பொதுக் கழிப்பறையிலும் தடையற்ற நீர் விநியோகம், விளக்கு வசதி, சோப்பு , குப்பைத் தொட்டிகள் உள்ளிட்டவற்றை அமைத்து, அவற்றின் பராமரிப்பை உறுதி செய்யுமாறு பெருநகர பெங்களூருஆணையத்தை இந்த அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது. மேலும், பெண்கள் மற்றும் திருநங்கைகள் என பாலின சமத்துவத்துடன் கூடிய பொதுக் கழிப்பறைகளை அமைக்கவும் வலியுறுத்தியுள்ளது.

பெங்களூரு முழுவதும் 1,000-க்கும் மேற்பட்ட நவீன, மக்கள் எளிதாகப் பயன்படுத்தக்கூடிய, நன்கு பராமரிக்கப்படும் பொதுக் கழிப்பறைகளை அமைக்கவும் அந்த அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது. பேருந்து நிலையங்கள், மெட்ரோ நிலையங்கள், சந்தைகள், பூங்காக்கள், சுற்றுலாத் தலங்கள் மற்றும் மக்கள் அதிக நடமாட்டமுள்ள பிற பகுதிகளுக்கு முன்னுரிமை அளித்து இந்த கழிப்பறைகளை அமைக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# உலகக் கோப்பை: சாம்பியன் வீரர்களுக்கு முதன்முறையாக மோதிரம்

பிபா உலகக் கோப்பையில் வெற்று பெறும் வீரர்களுக்கு சாம்பியன்ஸ் என்று எழுத்து பொறிக்கப்பட்ட தங்க மோதிரம்வழங்கப்படுகிறது. இத்தகைய மோதிரம் வழங்கப்படுவது இதுவே முதன்முறை.

உலகக் கோப்பை கால்பந்துதொடரின் இறுதி ஆட்டம்இன்றுநள்ளிரவு12.30 மணிக்கு நியூஜெர்சியில் நடைபெறுகிறது. இறுதி ஆட்டத்தில்நடப்புசாம்பியன் அர்ஜெண்டினாவுடன் 2010ம் ஆண்டு சாம்பியன்ஸ் பெயின் அணி மோதுகிறது. போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு ஃபிபாதங்கக்கோப்பையுடன் 490 கோடி பரிசுத் தொகை வழங்கப்படும். அதோடு, வெற்றி பெற்ற அணி வீரர்களுக்கு சாம்பியன்ஸ் என்று பொறிக்கப்பட்ட மோதிரங்களும்வழங்கப்பட வுள்ளது. மொத்தம் 2026 மோதிரங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. போட்டி முடிந்ததும், பரிசளிப்பு விழாவில் கேப்டன் மற்றும் பயிற்சியாளர்களுக்கு மட்டும் மோதிரம் அணிவிக்கப் படும். பிற வீரர்களுக்கு பின்னர், வழங்கப்படும். சாம்பியன் அணிக்கு என 30 மோதிரங்கள் தயாராகவுள்ளன. மீதமுள்ள 1996 மோதிரங்கள் ரசிகர்களுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

வட அமெரிக்க கண்டத்தில் போட்டியில் சாம்பியனாகும் அணி வீரர்களுக்கு மோதிரம் வழங்கப்படுவது பாரம்பரியமானதுதான். இதை, ஃபிபா தற்போது, உலகக் கோப்பை தொடரிலும் அமல்படுத்த முடிவுசெய்துள்ளது. 2030ம் ஆண்டு உலகக் கோப்பை தொடர் மிக முக்கியமானது. அதாவது, 1930ம் ஆண்டு முதன்முறையாக உலகக் கோப்பை கால்பந்து தொடர் நடத்தப்பட்டது. உருகுவேயில் நடந்த இந்த தொடரில் உருகுவே அணி சாம்பியன் ஆனது. உலகக் கோப்பை தொடர் தொடங்கப்பட்டு, 100 ஆண்டுகள் ஆவதை முன்னிட்டு, 2030ம் ஆண்டு உலகக்கோப்பைதொடரில் பங்கேற்கும் அணிகளின் எண்ணிக்கையை 64 ஆக உயர்த்த ஃபிபா திட்டமிட்டுள்ளது.

# குன்னூர் அருகே மக்களை மிரட்டும் 'சியாரிடே' ஈக்கள்



நீலகிரி மாவட்டத் குன்னூர் அருகே சேலாஸ் பகுதியில் கடந்த ஒரு வாரமாக 'சியாரிடே' எனப்படும் ஈக்கள் உணவு, தண்ணீரில், விழுந்து வருவதால் மக்கள் வெகுவாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். அன்றாட பணிகளை மேற்கொள்ள முடியாமல் தவித்து வருகின்றனர். இப்பகுதியில், புகை மற்றும் மருந்து தெளிக்கும் பணிகளை பேரூராட்சி நிர்வாகம் மேற்கொண்ட போதும் தீர்வு ஏற்பட்டவில்லை.

கடைகளில் உணவு பொருட்கள்மீதுவிழுவதால், வியாபாரிகளும், நுகர்வோரும் பாதிக்கின்றனர். இதனால்,ஏதாவது பெரிய நோய் பாதிப்பு வருமா என்ற அச்சம் அனைவர் மத்தியிலும் உள்ளது. பேரூராட்சி சார்பில் புகையுடன் மருந்து தெளித்தும் இவை அழியாமல் அதிகரித்து வருகிறது. இவற்றால் ஏற்படும் சிரமம் குறித்து உலிக்கல் பேரூராட்சி அதிகாரிகளிடம் தெரிவித்தும், நிரந்தர தீர்வுகாணமுடியவில்லை. மாவட்ட நிர்வாகத்தின் கவனம்ஈர்க்ககடையடைப்பு நடத்தப்பட்டது.

இந்தபூச்சிகள்'சியாரிடே' வகை பூஞ்சை ஈக்கள். சியாரிடே வகை பூஞ்சை ஈக்கள் பொதுவாக ஈரமான மண், கரிம பொருட்கள், பசுமை குடில்கள் மற்றும் காளான் பண்ணைகள் போன்ற இடங்களில் இனப்பெருக்கம் செய்கின்றன. இவை மனிதர்களை கடிக்கவோ, கொட்டவோ அல்லது விஷம் செலுத்தவோ செய்யாதுஎன்பதால்நேரடி ஆபத்து இல்லை. இதன் வாழ்க்கைசுழற்சி, 21 முதல் 28 நாட்கள் வரையாகும். இதன் இனப்பெருக்க இடங்களை கண்டறிந்து அழிப்பதே சரியானது.

# கட்சி, கொடி ரெடி... பாய்ச்சலுக்கு தயாராகும் அண்ணாமலை



கடந்த 2024 நாடாளுமன்ற தேர்தல் வரை, தமிழகபாஜகவின் முகமாக அண்ணாமலை இருந்தார்.அவரது வருகைபரபரப்பானாலும் தேர்தல் அரசியல் ரீதியாக பாஜகவுக்கு வெற்றியை கொடுக்கவில்லை. இதனால் அண்ணாமலையை ஓரம்கட்டிவிட்டு, நயினார் நாகேந்திரனை மாநில தலைவராக நியமித்தனர். தேர்தல் பொறுப்பு, கட்சி பொறுப்பு எதிலும் அண்ணாமலைக்கு முக்கியத்துவம்தரவில்லை. இதனால் அண்ணாமலை கடும் அதிருப்தியில் இருந்தார்.

கடந்த சட்டசபை தேர்தலில்போட்டியிடுவதை கூட அண்ணாமலை புறக்கணித்தார். கடந்த மாதம் அவர் பாஜகவில் இருந்து விலகினார். தொடர்ந்து 'வீ த லீடர்ஸ்' என்கிற இயக்கத்தை உருவாக்கினார். ஆன்லைன் மற்றும் அந்தந்தபகுதிகள்வாரியாக உறுப்பினர் சேர்க்கையும் நடைபெற்றது. இந்த அமைப்பின் முதல் மாநாடு பொள்ளாச்சியில் நடைபெற்றது.

இந்நிலையில் வீ த லீடர்ஸ் இயக்கத்தின் இரண்டாவது மாநாட்டை தூத்துக்குடியில் நடத்த திட்டமிட்டுள்ளனர். தென் மண்டலத்தின் வாக்கு வங்கியை குறி வைத்து அண்ணாமலை இந்த நகர்வை எடுத்துள்ளார். அடுத்தடுத்து மண்டல வாரியாக மாநாடு நடத்தவுள்ளார்.உள்ளாட்சி தேர்தல், இடைத்தேர்தலை சந்திப்பதற்கு அண்ணாமலை பல்வேறு திட்டங்களை வகுத்து வருகிறார்கள். அந்த வகையல் அவரின் இயக்கத்தை அரசியல் கட்சியாக மாற்றவுள்ளார். இதற்காக புதிய கட்சியின் பெயர் மற்றும் கொடியை விரைவில் அவர் அறிவிக்கவுள்ளார். இதற்கான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.வருகிற ஆகஸ்ட்மாதம்மூன்றாவது வாரத்தில் புதிய கட்சியின் பெயர் மற்றும் கொடியை அண்ணாமலை அறிமுகம் செய்யவுள்ளார்.

வருகிற செப்டம்பர் மாதம் கட்சியின் முதல் மாநாட்டை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர். செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் மதுரை அல்லது திருச்சி அண்ணாமலை கட்சியின் மாநாடு பிரம்மாண்டமாகநடைபெற திட்டமிட்டு வருகிறார்கள்.

பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை அக்கட்சியில் இருந்து விலகி தனி இயக்கத்தை தொடங்கியுள்ளார். விரைவில் அவர் இயக்கத்தை கட்சியாக மாற்றமுடிவுசெய்துள்ளார். கட்சி பெயர், கொடியை தயார் செய்துள்ள நிலையில், செப்டம்பரில் முதல் மாநாட்டை நடத்தவுள்ளாராம். த

# வறட்சியின் பிடியில் நீலகிரி; அதிகரிக்கும் வெப்பத்தால் மக்கள் திகைப்பு

நீலகிரியில், கேரளா மாநிலத்தில் மே இறுதி மாதத்தில் துவங்கும், தென்மேற்கு பருவமழை அதிகரிப்பது வழக்கம். குறிப்பாக, கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதிகளில், இதன் தாக்கம் அதிகரித்து ஆறுகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டு, தாழ்வான பகுதிகளில் மழை வெள்ளம் சூழ்ந்து பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தும். அத்துடன் நிலத்தடி நீர்மட்டமும் அதிகரிக்கும். 'எல்நினோ' பாதிப்பின் காரணமாக தென்மேற்கு பருவமழை குறைந்து, நீலகிரி வறண்ட மாவட்டமாகமாறிவருகிறது. இம்மாதம் வெளியே தலை காட்ட முடியாத அளவிற்கு மழை பொழிவு இப்பதற்கு பதில், கோடை காலத்தை நினைவூட்டும் வகையில் வெப்பம் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டு, ஜன., முதல் ஜூலை மாதம் வரை இந்தியாவின் இரண்டாவது சிரபுஞ்சியான தேவாலா பகுதியில், 322.75 செ.மீ மழை பெய்த நிலையில், நடப்பு ஆண்டு ஜூலை, 15ஆம் தேதி வரை, 140.10 செ.மீ மழை மட்டுமே பெய்துள்ளது. இதனால், நீரோடைகள் மற்றும் ஆறுகளில், தண்ணீர் வரத்து வெகுவாக குறைந்து கிணறுகளில் தண்ணீர் வற்றி காணப்படுகிறது. கேரளாவிற்கு அதிகளவு தண்ணீரை கொண்டு செல்லும் பாண்டியாறு--புன்னம்புலா, கோட்டூர் ஆறுகள், கபினியின் முக்கிய கிளை நதியான பொன்னானிஆறுகளில்மிக குறைந்த அளவே தண்ணீர் வருகிறது. இதனால், தமிழகம்,கேரளா,கர்நாடகா மாநிலங்களில்குடிநீர்மற்றும் விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறைஏற்பட்டுள்ளது.

இதேநிலைதொடர்ந்தால், தேயிலை, குறுமிளகு, காபி மற்றும் காய்கறி விவசாயிகள் முழுமையாக பாதிக்கப்பட்டு,விவசாயிகள் மற்றும்அதனைசார்ந்துள்ள தொழிலாளர்கள் மிக கடுமையான பாதிப்பை சந்திக்கும் சூழல் உருவாகும்.




# மனிதர்களை குளிர்விக்க பிரிட்ஜ்

ஜப்பானில் அதிகரித்து வரும் வெப்ப அலை பாதிப்புகளை சமாளிக்கும் வகையில், மனிதர்களின் உடல்வெப்பநிலையைசில நிமிடங்களில் குறைக்கும் புதிய குளிரூட்டும் கேபின் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

"டோ ஹியேமோன் பாக்ஸ்" (Do Hiemon Box) எனப்படும் இந்த கருவி, உணவுப் பொருட்களை வைக்கும் குளிர்சாதனப் பெட்டி போன்ற தோற்றம் கொண்டிருந்தாலும், மனிதர்கள் உள்ளே நின்று உடலை விரைவாக குளிர்வித்துக் கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த கேபினில் சுமார் 5 நிமிடங்கள் இருந்தாலே உடல் வெப்பநிலை குறைந்து, வெப்ப அலை காரணமாக ஏற்படும் சோர்வு மற்றும் உடல்நலப்பாதிப்புகளைத் தவிர்க்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கட்டுமானத் தொழிலாளர்கள், தொழிற்சாலை ஊழியர்கள் மற்றும் வெளிப்புறங்களில் பணிபுரிபவர்களுக்கு இது பயனுள்ளதாக இருக்கும் என கூறப்படுகிறது.

காலநிலைமாற்றத்தால் வெப்ப அலைகள் தீவிரமடைந்து வரும் நிலையில், இதுபோன்ற தொழில்நுட்பங்கள் எதிர்காலத்தில் பல நாடுகளில் பரவலாக பயன்பாட்டுக்கு வரும் என நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

# மெஸ்ஸியின் சாதனையை குறைத்து மதிப்பிட வேண்டாம்

## கங்குலி



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் சௌரவ் கங்குலி, மெஸ்ஸியின் சாதனைகளை ஒரே ஒரு போட்டியின் முடிவை வைத்து மதிப்பிடக் கூடாது என்று தெரிவித்துள்ளார்.

ஸ்பெயினுக்கு எதிரான உலகக் கோப்பை இறுதிப் போட்டியில் மெஸ்ஸியின் அர்ஜென்டினா அணி 1-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. இது குறித்து பேசிய கங்குலி, "லியோனல் மெஸ்ஸியை ஒருபோதும் ஒரேயொரு போட்டியைக் கொண்டு மதிப்பிடக்கூடாது. அவரும் ஒரு மனிதர்தான். தினசரி யாராலும் ஒரே மாதிரியான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாது. சில நாட்கள் நமக்கு சாதகமாக அமையாமல் போகலாம். ஒரே ஒரு இறுதிப் போட்டி அல்லது ஒரு ஆட்டத்தை வைத்துக்கொண்டு அவருடைய ஒட்டுமொத்த விளையாட்டுவாழ்க்கையையும் மதிப்பிடுவது நியாய மற்றது.

மெஸ்ஸி ஏற்கனவே உலகக் கோப்பையை வென்றுள்ளார், எண்ணற்ற சாதனைகளை முறியடித்துள்ளார் மற்றும் தனது அசாத்திய திறமையால் வரலாற்றின் மிகச்சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவராகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார். இந்த ஒரு தோல்வி அவரது சாதனைகளையோ அல்லது அவரது பெருமையையோ எந்த வகையிலும் குறைத்துவிடாது" என்று அவர் கூறினார்.

"நான் உலகக் கோப்பை முழுவதையும் பார்க்கவில்லை, ஆனால் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் உட்பட சில முக்கியமானபோட்டிகளைப் பின்தொடர்ந்தேன். இறுதிப் போட்டியில், ஸ்பெயின் அணி அர்ஜென்டினாவை ஆரம்பத்திலிருந்தே தங்களது இயல்பான ஆட்டத்தை விளையாட அனுமதிக்கவில்லை. தொழில்நுட்ப ரீதியாக ஸ்பெயின் மிகவும் சிறப்பாகத் தயாராகியிருந்தது. அவர்களின் ஆட்டத் திட்டம் குறைபாடற்றதாக இருந்தது'' என்று தெரிவித்திருந்தார்.

# கோவை அரசு மருத்துவமனையில் மகப்பேறு பிரிவில் கட்டை பைக்கு தடை



அரசு மருத்துவமனை தாய்,சேய்சிகிச்சைபிரிவில், தினமும் 20க்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடக்கின்றன. குழந்தை பேறுக்கு பின், தாய்மார்கள் 5 நாட்கள் வரை தங்க வைக்கப்படுவர். இவர்களுடன்ஒருவர்மட்டும் தங்க அனுமதி உண்டு. பொள்ளாச்சி, திருப்பூர் உள்ளிட்ட இடங்களில் இருந்து பிரசவத்துக்கு வருவோருடன், குடும்ப உறுப்பினர்களும் தங்குவதால், அதிக இடநெருக்கடி ஏற்படுகிறது.

பிரசவித்த பெண்களை பார்க்க செல்வோர், வார்டுக்குள் கட்டை பை போன்ற பெரிய பைகள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனையில் பிறந்த குழந்தையை பைகளில் கடத்திய சம்பவங்கள் முன்பு, பல மாவட்டங்களில் நடந்துள்ளன. அரசு மருத்துவமனை பிரசவ வார்டில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிப்பதால், பாதுகாப்பு காரணங்களுக்காக மட்டுமே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளோம். கட்டப்பையில் வைத்து குழந்தைகளை கடத்தும் சம்பவம் பிற வார்டுகளில் பை கொண்டு செல்ல தடையில்லை.




# சூலூர் சிறுமி பாலியல் வன்கொடுமை கொலை குற்றவாளிகளுக்கு இந்தியாவே திரும்பி பார்க்கும் தண்டனை!

கோயம்புத்தூருக்கு அருகே உள்ள சூலூர் பகுதியில் மே 21 ம் தேதி 10 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கு தவெக ஆட்சியின் ஆரம்ப நாட்களில் மிகவும் பரபரப்பாக பேசப்பட்டது. இந்நிலையில் அந்த வழக்கு கோவை போக்சோ நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. குற்றம் சாட்டப்பட்ட கார்த்தி, மோகன் இருவருக்கும் 819 பக்கங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையின் நகல் கடந்த ஜூன் 11ஆம் தேதி வழங்கப்பட்டது. இதையடுத்து வழக்கு விசாரணை வேகவேகமாக நடைபெற்று வருகிறது. இதற்கிடையில் போக்சோ நீதிமன்றநீதிபதிபகவதியம் மாள் சில நாட்களுக்கு முன் பணி ஓய்வு பெற்றார்.

இதனால் இந்த வழக்கின் விசாரணை பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக கோவை மாவட்ட எஸ்.சி.எஸ்.டி. நீதிமன்ற நீதிபதி விவேகானந்தன், போக்சோ நீதிபதியாக கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டு, சூலூர் சிறுமி கொலை வழக்கு தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அரசு வழக்கறிஞர் கே.ஆர்.சங்கரன், கூடுதல் பிபி செல்வம், இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான டி.எஸ்.பி. கரிகால் பாரி சங்கர் ஆகியோர் இவ்வழக்கின் மீது சிறப்பு கவனமெடுத்து தினந்தோறும் நீதிமன்றம் சென்று வழக்கு தொடர்பான பணிகளை கவனித்து வருகின்றனர். இதுகுறித்து கோவை மாவட்ட வழக்கறிஞர்கள் வட்டாரத்தில் விசாரித்த போது, 'போலீசார் -அரசு வழக்கறிஞர்கள் இடையே சிறப்பான ஒருங்கிணைப்பு இருப்பதால் இந்த வழக்கு விரைவில் விசாரணை நிறைவு பெற்று நீதிபதி தீர்ப்பை வெளியிடுவார் என எதிர்பார்க்கிறோம். அனேகமாக இன்னும் மூன்று வாரங்களில் தீர்ப்பு வரலாம். இந்த வழக்கின் தீர்ப்பு இனி ஒரு குற்றம் இதுபோல நடக்கக் கூடாது என்ற அளவுக்கு அச்சத்தை சமூகத்தில் ஏற்படுத்த வேண்டும் என அரசு வழக்கறிஞர்களும் போலீசாரும் உழைக்கிறார்கள்.

கடத்தல் குற்றம், போக்சோ குற்றம், பாலியல் வன்முறை, கொலை இந்த நான்கு குற்றங்களுக்கும் தனித்தனியாக தண்டனை விதிக்கப்பட வாய்ப்பிருக்கிறது. இது இந்திய நீதித் துறை வரலாற்றிலேயே மிக முக்கியமான தீர்ப்பாக இருக்கும்' என்கின்றனர்.




# ‘காற்று மாசு, நுரையீரலுக்கு கேடு’

## கோவை ராயல் கேர் மருத்துவமனை டாக்டர் மாதேஸ்வரன் எச்சரிக்கை

தி கோவை ஹெரால்டு

கோவை ராயல் கேர் மருத்துவமனையில் மேம்பட்ட நுரையீரல் சிகிச்சை முறை குறித்த இரு நாள் கருத்தரங்கில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து மருத்துவ நிபுணர்கள் பங்கேற்றனர்.

கோவை நீலாம்பூர் பகுதியில் உள்ள ராயல் கேர் மருத்துவமனையில் மேம்பட்ட நுரையீரல் சிகிச்சை கருத்தரங்கம் நேற்று தொடங்கியது. கருத்தரங்குக்கு மேம்பட்ட நுரையீரல் சிகிச்சை மருத்துவ நிபுணர்கள் பட்டாபி ராமன், அர்ஜுன் மற்றும் மகாதேவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ராயல் கேர் மருத்துவமனையின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் மாதேஸ்வரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்தார்.




இந்த கருத்தரங்கில் தமிழகம் மற்றும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து நுரையீரல் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் கலந்து கொண்டனர். நுரையீரல் மற்றும் ப்ளூரா தொடர்பான நவீன சிகிச்சை முறைகள், புதிய தொழில்நுட்பங்கள், சவாலான நோய்களுக்கான சிகிச்சை முறைகள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் விளக்கவுரையாற்றினர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய டாக்டர் மாதேஸ்வரன், இதுபோன்ற கருத்தரங்குகள் இளம் தலைமுறை மருத்துவர்களுக்கு சமீபத்திய மருத்துவ முன்னேற்றங்களையும், மேம்பட்ட நுரையீரல் தலையீட்டு சிகிச்சை முறைகளையும் அறிந்து கொள்ள சிறந்த வாய்ப்பாக அமையும். தற்போது சுற்றுச்சூழல் மாசுபாடு அதிகரித்து வருவதால் நுரையீரல் தொடர்பான நோய்களும் கணிசமாக உயர்ந்துவருவதுஉண்மை. காற்று மாசுபாட்டைக் குறைத்து சுற்றுச்சூழலை பாதுகாப்பது அரசின் பொறுப்பு மட்டுமல்ல, ஒவ்வொரு தனிமனிதரின் சமூகப் பொறுப்பு'' என்றார்.

கருத்தரங்கில் ராயல் கேர் மருத்துவமனையின் மருத்துவஇயக்குநர்டாக்டர். பரந்தாமன் சேதுபதி, தலைமை செயல்பாட்டு அலுவலர் மணி செந்தில் குமார், மூத்த பொது மேலாளர் வெங்கடேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தர்மேந்திர பிரதான் ராஜினாமா - முடிவுக்கு வந்தது போராட்டம்...

நீட் நுழைவுத்தேர்வில் நடைபெற்றதாகக் கூறப்படும் வினாத்தாள் கசிவு, ஆள்மாறாட்டம் மற்றும் மதிப்பெண் முறைகேடுகளுக்கு பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தனது ராஜினாமா கடிதத்தை பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ளார்.

இந்தமுறைகேடுகளைக் கண்டித்தும், தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தியும் டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான் பூச்சி ஜனதா தளம் அமைப்பினர் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

"அமைச்சர் பதவி விலகும் வரை போராட்டம் தொடரும்" என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இந்தப் போராட்டம்நாடுமுழுவதும் பரவி, தமிழகத்தின் சென்னை, மதுரை உள்ளிட்ட நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

போராட்டம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர்கள் ஜே.பி. நட்டா மற்றும் ஜிதேந்திர சிங் ஆகியோர் போராட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தைநடத்தினர். இந்தநிலையில்தர்மேந்திர பிரதான் தனது ராஜினாமா கடிதத்தை அளித்தார்.

தற்கொலை செய்து கொண்ட அனைத்து மாணவர்களின் குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் மற்றும் போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்ற கோரிக்கைகளை மத்திய அரசுபரிசீலனைசெய்வதாக கூறியதையடுத்து டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தகரப்பான்பூச்சிஜனதா தளம் அமைப்பினர் போராட்டத்தை திரும்ப பெற்றனர்.

இதையடுத்து நான்கு வார காலத்திற்குள் மத்திய அரசுடன் அடுத்தகட்ட பேச்சுவார்த்தை நடைபெறும் என்று சிஜேபி-யினர் தெரிவித்தனர்.

நீட்வினாத்தாள்கசிவான சம்பவத்தில் உயிரிழந்த மாணவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்குவது குறித்து, இன்னும் முடிவு எட்டப்படவில்லை என்று மத்திய அமைச்சர் ஜே.பி. நட்டா கூறினார்.

# ராமதாஸ் அரசியலுக்கு முழுக்கு



பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் நேற்று தனது88-வதுபிறந்தநாளை கொண்டாடினார். இதையொட்டி தந்தை ராமதாசைசந்தித்துபா.ம.க. தலைவர் அன்புமணி வாழ்த்துபெற்றார். இதனை தொடர்ந்து விழுப்புரம் தனியார் மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற பிறந்தநாள் நிகழ்ச்சியில் மனைவியுடன் ராமதாஸ் பங்கேற்றார். விழா மேடையில் மனைவி மற்றும்மகனுடன்அமர்ந்து ராமதாஸ் பேசியதாவது:-

எனது 88-வது பிறந்தநாளான இன்று முதல் அரசியல் துறவறம் மேற்கொள்கிறேன். அரசியல் பேசமாட்டேன், அரசியலில் தலையிட மாட்டேன், பா.ம.க.வை இனி அன்புமணி பார்த்துக்கொள்வார். தலைசுற்றல் இருந்ததால் 20 நாட்கள் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தேன் என்றார். பா.ம.க.வைஇனிஅன்புமணி பார்த்துக்கொள்வார் என்று ராமதாஸ் கூறியபோது விழாவில் கூடியிருந்த தொண்டர்கள் ஆரவாரம் செய்தனர்.

வயதோதிகம் காரணமாகராமதாஸ்இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிகிறது.

# வீட்டில் செடிகள் வளர்த்தால் உடலுக்கு இவ்வளவு பலன்களா?

வீட்டின் தோற்றத்தை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மனநலம், உற்பத்தித்திறன், கவனத்திறன் உள்ளிட்ட பல அம்சங்களிலும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது, மண்ணை மாற்றுவது போன்ற எளிய தோட்டப் பணிகள்கூட மனதை அமைதிப்படுத்தும் செயலாக அமைகிறது. இதனால் இதயத் துடிப்பு மற்றும் மன அழுத்தம் தொடர்பான சில உடலியல் அறிகுறிகளும் குறையலாம்.

மனச்சோர்வு, பதற்றம் போன்ற மனநலப் பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களுக்கு தோட்டப் பராமரிப்பு ஒரு சிகிச்சை முறையாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. செடிகளைப் பராமரிக்கும் பழக்கம், அன்றாட வாழ்க்கையில் ஒரு ஒழுங்கையும் பொறுப்புணர்வையும் உருவாக்குவதோடு, மனநிலையையும் மேம்படுத்த உதவக்கூடும். மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் இயற்கைக் காட்சிகள் அல்லது செடிகளைப் பார்க்கும் சூழல் இருந்தால், அவர்கள் விரைவாக குணமடைய வாய்ப்பு இருப்பதாக சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வலி நிவாரண மருந்துகளின் தேவை குறைவது மற்றும் மருத்துவமனையில் தங்கும் நாட்கள் குறைவது போன்ற பலன்களும் சில ஆய்வுகளில் பதிவாகியுள்ளன.

பசுமையான செடிகள் வீட்டின் தோற்றத்தை மாற்றுவதுடன், அமைதியான சூழலையும் உருவாக்குகின்றன. அதிக நேரம் திரை முன் செலவிடுபவர்களுக்கு, வீட்டுக்குள் இருக்கும் இந்த இயற்கைச் சூழல் மனதுக்கு ஓய்வையும் புத்துணர்ச்சியையும் தரக்கூடும். இதனால் வீட்டில் இருப்பதே இனிமையான அனுபவமாக மாறும்.

உட்புறச் செடிகள் வீட்டை அழகுபடுத்தும் அலங்காரப் பொருட்கள் மட்டுமல்ல. மனஅழுத்தத்தைக் குறைப்பது, கவனத்திறனை மேம்படுத்துவது, மனநலத்திற்கு ஆதரவளிப்பது போன்ற பல நன்மைகளையும் வழங்குகிறதாம்.

# விமான சேவை நிறுவனம் தொடங்க அதானி குழுமம் அனுமதி கேட்கிறது

நாட்டின் மிகப்பெரிய விமான நிலையங்களை நிர்வகித்து வரும் அதானி குழுமம், சொந்தமாக விமான சேவையை நடத்த அனுமதி வழங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளதாக தகவல்கள் வருகின்றன. இதற்காக தற்போதுள்ள விதிமுறையில் தளர்வு அளிக்குமாறும் குழுமம் வலியுறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

தற்போதைய சிவில் விமானப் போக்குவரத்து விதிகளின்படி, டெல்லி மற்றும் மும்பை போன்ற முக்கிய விமான நிலையங்களை இயக்கும் நிறுவனங்கள், ஒருதிட்டமிட்ட விமான நிறுவனத்தில் 10 சதவீதத்திற்கும் அதிகமான பங்குகளை வைத்திருக்க முடியாது. இந்த விதியே அதானி போன்ற விமான நிலைய ஆபரேட்டர்கள் நேரடியாகவிமானசேவையில் ஈடுபடுவதற்கு தடையாக உள்ளது. அந்த விதியில் மாற்றம் செய்ய வேண்டும் என்பதே அதானிகுழுமத்தின் முக்கிய கோரிக்கையாக கூறப்படுகிறது.

இந்திய உள்நாட்டு விமான சந்தையில் தற்போது இண்டிகோ மற்றும் ஏர் இந்தியா ஆகிய இரண்டு நிறுவனங்களே பெரும்பாலான சந்தைப் பங்கைக் கொண்டுள்ளன. இந்த இரு நிறுவனங்களின் ஆதிக்கத்தைக் குறைத்து, புதிய போட்டியாளர்களை உருவாக்கும் நோக்கில் மத்திய அரசு இந்த விதிமுறையைமறுபரிசீலனை செய்துவருவதாகதகவல்கள் தெரிவிக்கின்றன.

விதிமுறை மாற்றம் அமலுக்கு வந்தால், அதானி குழுமம் மட்டுமல்லாமல் ஜிஎம்ஆர் போன்ற விமான நிலையஆபரேட்டர்களுக்கும் சொந்த விமான சேவையை தொடங்கும் வாய்ப்பு உருவாகலாம். இது பயணிகளுக்கு கூடுதல் தேர்வுகளையும்போட்டியால் மேம்பட்ட சேவைகளையும் வழங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதானி குழுமத்தின் கோரிக்கை இன்னும் பரிசீலனையில் இருப்பதாகவும், இதுகுறித்து இறுதி முடிவைமத்திய அரசு எடுக்கவேண்டியுள்ளதாகவும் தகவல்கள்தெரிவிக்கின்றன. இருப்பினும், இந்த யோசனைக்குபோட்டிநிறுவனங்கள் எதிர்ப்பு தெரிவிக்க வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது. விமான நிலையங்களையும் விமான நிறுவனங்களையும் ஒரே நிறுவனம் கட்டுப்படுத்துவது போட்டி சமநிலையை பாதிக்கலாம் என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது.




Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami. (Note: All the litigations aur within the jurisdiction of Coimbatore courts only.)